இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 22-06-2023

# திருவாரூர் திசை காட்டுகிறது!

வான்புகழ் வள்ளுவருக்கு கோட்டம் கண்ட கலைஞருக்கு அவர் திருவான திருவாரூரில் கோட்டம் கண்டுள்ளார் திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சரும் - இந்தியாவில் முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதலமைச்சருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த நிகழ்ச்சி கோட்டம் திறப்பு விழாவாக மட்டுமல்லாமல், இந்திய ஜனநாயகக் கோட்பாட்டை மீட்டெடுப்பதற்கான கால்கோள் விழாவாக நடந்துள்ளது.

கலைஞர் கோட்டத்தை திறந்து வைப்பதற்காக மாண்புமிகு பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் வருவதாக இருந்தது. திடீரென வர இயலாத உடல் நலிவு அவருக்கு இருந்தது. அதனால் தனது உரையை தயாரித்து அனுப்பி வைத்தார். தி.மு.க. மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்கள் அவரது உரையினை வாசித்தார். இந்த உரையில் மாண்புமிகு நிதிஷ்குமார் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

**“சூன் 23 ஆம் தேதி பீகார் தலைநகர் பாட்னாவில் எதிர்க்கட்சிகள் கலந்து கொள்ளும் ஒரு முக்கியமான கூட்டம் நடைபெற உள்ளது. அதில் உங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றுச் சிறப்பிக்க இருக்கிறார். எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த ஒற்றுமை நாங்கள் எண்ணுவது போல் ஈடேறினால், எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்தால் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. அகற்றப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்” - இதுதான் மாண்புமிகு நிதிஷ்குமார் அவர்கள் இந்தியாவுக்குச் சொல்லும் செய்தி ஆகும்.**

இதனையே வழிமொழிந்து உரையாற்றினார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். “ஜனநாயகத்தை காக்கக்கூடிய பொறுப்பை ஏற்று அதற்கு அடித்தளம் அமைக்கும் பணியை பீகார் தொடங்கியிருக்கிறது. வருகிற 23-ஆம் தேதியன்று பீகார் மாநிலம் - பாட்னாவில் மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடக்க இருக்கிறது. பாட்னா என்பது இந்தியாவின் தொன்மையான நகரங்களில் ஒன்றாகும். பாடலிபுத்திரம் என்று வரலாற்றில் அழைக்கப்படக்கூடிய நகரம்தான் இன்றைய பாட்னா. அறிவு மற்றும் ஞானத்தின் அடையாளமாகச் சொல்லப்பட்ட நகரம் அது. ‘ஜனநாயகம் என்பது வீட்டுக்கு விளக்கு. சர்வாதிகாரம் என்பது காட்டுத் தீ’ என்று சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள். பா.ஜ.க. கடந்த பத்தாண்டு காலமாகப் பரப்பி வரும் சர்வாதிகார காட்டுத் தீயை அணைக்க வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கிறது. அதற்கான முதல் ஜனநாயக விளக்கை பாட்னாவில் ஏற்றுவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு நிதிஷ்குமார் அவர்கள் தொடங்கி வைக்க இருக்கிறார்கள். நானும் பாட்னா செல்கிறேன். உங்களுடைய அன்போடு செல்கிறேன். உங்களுடைய நம்பிக்கையோடு செல்கிறேன். ஜனநாயகப் போர்க்களத்தில் கலைஞரின் தளபதியாக நானும் பங்கெடுக்க இருக்கிறேன்” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போர்க்கோலம் பூண்டுள்ளார்.

**“இந்திய ஜனநாயகத்தைக் காக்க வேண்டிய நெருக்கடியான காலத்தில் இன்றைக்கு நாம் இருக்கிறோம். இதைச் செய்யாவிட்டால் மூவாயிரம் - நான்காயிரம் ஆண்டுப் பழமை கொண்ட தமிழ்நாடு என்ற மாநிலமே இல்லாமல் போய்விடும். இன்னும் சொல்கிறேன். கலைஞரின் உயிரினும் உயிரான உடன்பிறப்புகளே, இங்கே அமர்ந்திருக்கிறீர்களே, இந்த கலைஞருடைய உடன்பிறப்புகள் இதனை நீங்கள் செய்யாவிட்டால் வேறு யாராலும் இதனைச் செய்ய முடியாது. மீண்டும் பா.ஜ.க.வை ஆள அனுமதிப்பது என்பது தமிழுக்கும் - தமிழினத்துக்கும் - தமிழ்நாட்டுக்கும் - இந்திய நாட்டுக்கும் - இந்தியாவின் எதிர்காலத்துக்கும் அது கேடாக முடியும். மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் தமிழ்நாட்டில் எப்படி ஒருமுகமாக இருந்து செயல்படுகிறோமோ - செயல்பட்டு வெற்றியைப் பெறுகிறோமோ, அத்தகைய செயல்பாடும் ஒருங்கிணைப்பும் அகில இந்திய அளவில் ஏற்பட்டாக வேண்டும். வெற்றி வேண்டும். வெற்றிக்கு முன்னால் ஒற்றுமை வேண்டும். அதனுடைய முன்னோட்டமாகத்தான் பீகார் மாநிலத்தில் நடைபெறவுள்ள கூட்டம் அமையவிருக்கிறது. மீண்டும் சொல்கிறேன் கலைஞரின் உடன்பிறப்புகளே! நாம் ஒருதாய் மக்கள். அந்த உணர்வோடு பணியாற்றி கலைஞரின் கனவுகளை நிறைவேற்றுவோம்.” - என்ற மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதல்தான் இந்தியாவுக்கு திருவாரூர் காட்டும் திசை ஆகும்!**

இந்திய ஜனநாயகத்துக்கு எப்போதெல்லாம் ஆபத்து சூழ்கிறதோ அப்போதெல்லாம் வழிகாட்டியவர் திருவாரூர் கலைஞர் தான் என்பதே இந்திய அரசியல். 1988 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் உருவாக்கிய தேசிய முன்னணி என்பது ஒரு மாற்று அரசியலின் தொடக்கமாக அமைந்திருந்தது. வி.பி.சிங் தலைமையில் ஒரு சமூக நீதி அரசை அமைக்கக் காரணமாக அமைந்தது. 1996 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐக்கிய முன்னணி என்பது மிக நீண்ட காலம் ஆளவில்லை என்றாலும் மாநிலக் கட்சிகளின் விருப்பங்களை நிறைவேற்றும் அரசாக ஒன்றிய அரசை அமைக்க முடிந்தது. 2004 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியானது மதச்சார்பற்ற ஒரு அரசை ஒன்றியத்தில் உருவாக்கி நடத்த வழியமைத்தது.

வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. அரசின் தி.மு.க. அங்கம் வகித்த போதிலும், அக்கட்சியின் ஆட்சியையும் குறைந்த பட்ச செயல்திட்டத்துக்கு கட்டுப்பட வைத்து அதில் இருந்து மீற முடியாமல் கட்டுப்படுத்தியது கலைஞரின் ஆற்றலாகும். ‘கலைஞர் இருக்குமிடத்தில் மதச்சார்பு இருக்காது’ என்று முன்னாள் நிதி அமைச்சர் பெரியவர் சி.சுப்பிரமணியம் சொல்லும் அளவுக்கு பா.ஜ.க.வின் கடிவாளத்தை கலைஞர் கையில் வைத்திருந்தார்.

**‘இந்தியாவின் தலைநகரம் டெல்லி அல்ல, சென்னை என்று பத்திரிகைகள் எழுத கலைஞரே காரணம்’ என்றார் முன்னாள் பிரதமர் தேவகவுடா. இதோ இப்போதும் திருவாரூர் திசை காட்டுகிறது இந்திய ஜனநாயகத்தைக் காக்க!**

# நன்றி தெரிவித்து நம்பிக்கையுடன் புறப்படுகிறேன்!

## உங்களில் ஒருவன்... முதல் பக்கத் தொடர்ச்சி

**முத்தமிழறிஞர் பிறந்து - வளர்ந்த காலத்தில் திருவாரூர் எப்படி இருந்தது, இன்று அந்த நகரம் மாவட்டத் தலைநகராக்கப்பட்டு, மத்திய பல்கலைக் கழகம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, பல்வேறு கட்டமைப்புகளைக் கொண்டதாக வளர்ச்சியடைந்திருப்பதற்கு காரணம் தலைவர் கலைஞர்தான்**



**என்பதை கோட்டத்திற்கு வருகின்ற ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள முடியும். கழக உடன்பிறப்புகள் தங்களுக்கு நேரம் வாய்க்கும் போது மட்டுமல்ல, நேரத்தை ஒதுக்கி ஒரு முறையேனும் கலைஞர் கோட்டத்தைக் காண வேண்டும். கோட்டத்தைக் காணும் போது உடன்பிறப்புகளின் உள்ளத்தில் உத்வேகம் பிறக்கும்.**

அந்த உத்வேகத்தைக் கலைஞர் கோட்டம் திறப்பு விழா நாளில் நானும் பெற்றேன். கோட்டத்தில் உள்ள திருமண அரங்கில் நான்கு இணையர்களுக்கு சுயமரியாதைத் திருமணத்தை எளிய முறையில் நடத்தி வைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் கட்டிக்காத்த தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா கொள்கைகளுக்கு வலிமை சேர்த்தோம். கொள்கை வலிவும் இயக்க உணர்வும் பெருகிடத் திருவாரூர் திருத்தலத்தின் நிகழ்வுகளைத் தொடர்ந்து, பாடலிபுத்திரம் என வரலாற்றில் பெயர் பெற்ற பாட்னா நகருக்குப் புறப்பட ஆயத்தமாகிவிட்டேன்.

கலைஞர் கோட்டம் திறப்பு விழாவில் நான் உரையாற்றியது போல, இந்தியாவைக் காத்திட மதச்சார்பற்ற முற்போக்கு இயக்கங்கள் இணைந்து நிற்க வேண்டிய தருணம் இது. மதவெறி கொண்ட பா.ஜ.க.வை வீழ்த்துவது ஒன்றே இந்தியாவின் பன்முகத் தன்மையைக் காத்திடும். அதற்கான முன்னெடுப்பை பீகார் முதலமைச்சர் அன்பிற்குரிய நிதிஷ் குமார் மேற்கொண்டிருக்கிறார். ஜூன் 23-ஆம்



நாள் பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் நடைபெறவுள்ள மதச்சார்பற்ற முற்போக்கு இயக்கங்களின் ஆலோசனைக் கூட்டத்தில், காலமெல்லாம் மத நல்லிணக்கக் கொள்கையை வலியுறுத்திய நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் பிரதிநிதியாக நான் பங்கேற்கிறேன். இந்திய ஒன்றியத்தின் ஒருமைப்பாட்டு உணர்வை - ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதற்கான இந்த முன்னெடுப்பு 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நல்ல விளைவைத் தரும் என்ற நம்பிக்கை மிகுந்திருக்கிறது.

கலைஞருக்குக் கோட்டம் கண்டோம். அவர் வழியில் ஜனநாயகப் போர்க்களத்தைச் சந்தித்து நாட்டு நலன் காண்போம்.

அன்புடன்,
**மு.க.ஸ்டாலின்,**

**திருவள்ளுவர் ஆண்டு 2054,
ஆனி 6,
21.06.2023.**

## தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மழைக்கு வாய்ப்பு!

*சென்னை, ஜூன் 22 -*

*சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டின் வடபகுதிகளின் மேல், மேலடுக்குகளில் கிழக்கு திசை காற்றும் மேற்கு திசை காற்றும் சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக, நேற்று (21.06.2023) ஒருசில இடங்களிலும், தமிழ்நாட்டின் தென் பகுதியில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்தது.*

*இன்று (22.06.2023) முதல் 25.06.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 33 34 டிகிரி செல்சியஸ் இருக்கக்கூடும். மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*

## ரஷியாவில் வெடிமருந்து தொழிற்சாலையில் விபத்து!

*மாஸ்கோ, ஜூன் 22-*

*ரஷிய தலைநகர் மாஸ்கோவின் தென் கிழக்கே உள்ள தம்போவ் பகுதியில் வெடிமருந்து தொழிற்சாலை இயங்கி வருகிறது. இந்த தொழிற்சாலையில் திடீரென்று வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் 4 தொழிலாளர்கள் பலியானார்கள். 12 பேர் காயமடைந்தனர். வெடிவிபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. இது பயங்கரவாத தாக்குதல் அல்ல என்று தம்போவ் கவர்னர் மாக்சிம் யெகோரோவ் தெரிவித்தார். உக்ரைன் மீது ரஷியா போர் தாக்குதல் நடத்தி வரும் சூழலில் சில நாட்களாக ரஷியாவின் ஆயுத கிடங்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.*









மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை விமலாம்பிகை திருமண மண்டபத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் 4675 பயனாளிகளுக்கு ரூ.34.66 கோடி மதிப்பில் அரசின் நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.06.2023) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத்துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.